**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.**

திரு.பொன்வேந்தன், பி.டெக், எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | பஞ்சாயுதம் | அசல் வழக்கு எண். | 1/2015 |
| த/பெ. | - | அர்சுனன் | வா.சா. | 1 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

07.04.2026

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

1. சந்திரசேகர் என்னுடைய அண்ணன். அவர் உப்புவேலூரில் உள்ளார். அவருக்கு இந்த வழக்கு நடப்பது தெரியுமா என்றால் தெரியும். அர்ச்சுனகவுண்டர் என்பவருக்கு சந்திரசேகர் என்பவர் மூத்த மகன் என்றால் சரிதான். என் அண்ணன் சந்திரசேகர் இந்த வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். எதற்காக அண்ணனை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் என் அண்ணன் வழக்கு போட வரவில்லை, சொத்தின் நாம் தான் இருக்கும் போது எதற்கு வழக்கு போட வேண்டும் என்று சொன்னார், என்னுடைய சொத்திற்கு நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு போடுவதற்கு என் அண்ணன் மறுத்துவிட்டார் என்று வழக்குரை மற்றும் பிரமாண பத்திரிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. என் அப்பா இறந்ததிற்கு பின்னிட்டு எந்த வருடம் நானும் என் அண்ணனும் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் 2002ம் ஆண்டில் பிரித்துக்கொண்டோம். என் வழக்குரை மற்றும் பிரமாண பத்திரிக்கையில் 2002ம்

ஆண்டில் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டோம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 2002 ம் ஆண்டில் மாதம் மற்றும் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வாய்மொழி பாகத்தில் என் மூத்த சகோதரர் சந்திரசேகர் என்பவருக்கு பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். சந்திரசேகர் என்பவருக்கு ஒதுக்கிய சொத்தை நீக்கி வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் நீக்கி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

3. பட்டா எண்.7 ல் என் சகோதரர்களான மூவருக்கும் சேர்த்து எவ்வளவு பூமி என்றால் 75 செண்ட் மற்றும் 55 செண்ட், அது போக இதர சொத்துக்களும் உள்ளன. வழக்கு சொத்து விவரத்தில் சக்குபந்திகள் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எத்தனை அயிட்ட சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இரண்டு அயிட்டத்திற்கு தாக்கல் செய்துள்ளேன். வாய்மொழி பாக பிரிவினையில் யாருக்கு எவ்வளவு பூமி ஒதுக்கப்பட்டது என்று சக்குபந்தி குறிப்பிட்டு வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்குரையில் ஒரு பகுதி எனக்கும் ஒரு பகுதி சந்திரசேகரனுக்கும் ஒதுக்கப்பட்டது என்று குறிப்பிட்ட நிலையில் எந்த பகுதி யாருக்கு என்று சக்குபந்தி குறிப்பிட்டு விளக்கமாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 2002 ல் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டதை 2003 ல் பதிவு செய்து கொண்டோம். 2003 ல் பதிவு செய்த கொண்ட பத்திரம் எங்குள்ளது என்றால் வழக்கறிஞரிடம் உள்ளது. நான் சொல்வதுபோல் வாய்மொழி பாகம் மற்றும் அதன் பின்னிட்டு எழுத்து மூலமாக எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல.

4. 29.12.2003 ல் என் அண்ணன் கங்காதரன் ஒரு சொத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அது தான் வா.சா.ஆ.4 என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் வாய்மொழி பாகத்தை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வாய்மொழி பாகம் ஏற்படாததால் தான் வா.சா.ஆ.4 ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மற்றொரு சொத்தை யாரிடமிருந்து கிரையம் வாங்கினேன் என்றால் என் அண்ணன் கங்காதரன் என்பவரிடமிருந்து வாங்கினேன். அது தான் வா.சா.ஆ.5 என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் வாய்மொழி பாகத்தை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பொய் என்பதால் தான் என் அண்ணன் சந்திரசேகரன் என்பவரை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

5. செட்டில்மெண்ட் ஆவணம் ஆவண எண்.2927/2012 ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் எனக்கு ஞபாகமில்லை. ஆவண எண்.2927/2012 ஆவணத்தில் என்னனென்ன விவரங்கள் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. ஆவண எண்.2927/2012 ஆவணத்தை படித்து பார்க்காதால் அது குறித்து நான் பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல. என் தகப்பனார் பெயரும் 1 ம் பிரதிவாதி பெயரும் ஒன்று என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் அனைத்தும் 1 ம் பிரதிவாதியின் தந்தை பெயரில் தான் உள்ளது என்றும் என் அப்பா பெயர் அர்ச்சுன கவுண்டர் என்பதை வைத்து கொண்டு பொய்யாக வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில்

அர்ச்சுன கவுண்டர் என்பவரின் அப்பா பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அர்ச்சுண கவுண்டர் என்ற பெயர் 2 ம் பிரதிவாதியின் கணவர் என்றால் சரியல்ல, என்னுடைய அப்பா பெயர். நான் தாக்கல் செய்துள்ள வருவாய் ஆவணங்கள் வழக்கு சொத்திற்கு சம்மந்தமில்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல.

6. வா.சா.ஆ.1 ஆவணத்தில் என் அப்பாவின் அப்பா பெயர் இல்லாதது குறித்து நான் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் இப்போது நடவடிக்கை எடுத்து வருகிறேன். 2002 ல் வாய்மொழி பாகம் ஏற்பட்ட பின்பும் 2003 ல் அதனை பதிவு செய்த பின்பும் வழக்கு சொத்திற்கு என் பெயரிலேயோ என் சகோதரர் பெயரிலேயோ பட்டா மாற்றப்பட்டதா என்றால் இல்லை. பாக பிரிவினைக்கு பின்பு என் பெயரிலும் என் சகோதரர்கள் பெயரிலும் தனி தனியாக அடங்கல் கணக்கு மாற்றப்பட்டுள்ளது என்றால் என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கும் எனக்கும் சம்மந்தமில்லை என்றும் என் தந்தை பெயர் அர்ச்சுனகவுண்டர் என்பதை வைத்து கொண்டு பொய்யாக வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the presence of the withess read over to the witness, and admitted by him/her to be correct.

District Munsif
Vanur.